ருஷ்ய நாட்டு அழகி



"ருஷ்யநாட்டு அழகி"

கே. ஜி. இராதா மணாளன்

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு, :: சென்னை

இரண்டாம் பதிப்பு—1951.

பதிப்புரிமை பெற்றது.

விலை 0 8 0

ஸ்ரீ பிரிண்டெர்ஸ், 147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

பாசறை பகர்வது :-

நண்பர் இராதாமணாளன், நமக்கு மட்டுமல்ல, செந்தமிழ்ச் சிறுகதை என்னும் ஆநந்தத் தேனை அள்ளி விழுங்குவதில் அடங்காத ஆர்வமும் களிப்பும் படைத்த ஆயிரமாயிரம் இளந் தமிழர்கள் அத்தனை பேருக்குமே நண்பர்தான். அந்த இளைஞர் உலகத்து நண்பர்கள் இந்த எழுத்தாளர் உலகத்து வீர இளைஞரை நேரிலே கண்டதில்லை என்ற போதிலும், இவர்தம சிறுகதைத் தூதுவன் மூலமாக, இவருடைய கலை உள்ளத்தையும் தங்களுடைய தமிழ் உளளத்தையும் ஒன்றுடன் ஒன்று இணைபிரியாத தோழாகளாக ஆக்கிக் கொண்டவர்கள. எனவே தான இராதாமணாளனின் தமிழைக் கண்டால், அவர் தீட்டிடும் அந்த இனிய எழுத்தோவியங்களைக் கண்டால, அந்த எழுத்தோவியங்களில் நிழலாடும் உயிர்ப்பாற்றலை—உணர்ச்சித் திறத்தை—கலையின் எழிலைக் கண்டால், அந்த இளைஞர்களின் உள்ளம் அன்றலர்ந்த தாமரையெனப் பெருமகிழ்வு பூக்கிறது.

உண்மையிலேயே, செந்தமிழர் உண்பதற்குரிய நல்ல செங்கரும்பு இராதாமணாளனின் தமிழ்! அழகு தவழும் இனிய நடை, தேன் ஆறுபோன்ற சொற்கள்-சொற்றொடர்கள், ஜீவகளை ததும்பும் கதை உறுப்பினர்கள், இன்பமா—துன்பமா—வீரமா—வேதனையா, எல்லா உணர்ச்சிகளும் பின்னிக்கிடந்து எழில் பரப்பும் சுவைமிகு கதைப்போக்கு, இவ்வளவையும் ஒருங்கே காணவேண்டுமானால், அது, தமிழகத்தில், ஒரு ஐந்தாறு எழுத்தாளர்களிடம்தான் காணமுடியும். அவர்களிலே ஒருவர், தோழர் இராதாமணாளன். இது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை, நாம், எந்த இடத்திலும், நெஞ்சு நிமிர்ந்து கூறமுடியும். அப்படிக் கூறும்போது, நாம், அப்படிக் கூறுவதற்கான அசைக்க முடியாத ஆதாரங்கள் இதோ

இதோ எண்ணற்றன உண்டு பாரீர் என்று, பூரிப்புடன், பெருமகிழ்வுடன், சற்று இறுமாப்புடன் கூட, இராதா மணாளனின் எழுத்தோவியங்களை எடுத்தெடுத்துக் காட்ட முடியும். அப்படி எடுத்துக் காட்டப்படக்கூடிய பெருமை யடைத்த அரிய ஏடுகளில ஒன்றே இந்தத் தேன்மொழிச் சுவடி—"ருஷ்யநாட்டு அழகி"

"ருஷ்யநாட்டு அழகி," சுவையான சில காதல் கதைகளின் தொகுப்பு. இந்தக் கதைகள் உண்மையிலேயேகதைகள் அல்ல! ஒவ்வொரு காலததில், ஒவ்வொரு நாட்டில், உண்மையாகவே நடந்த வரலாற்றுத் துணுக்குகள். இந்தக் கதைகளிலே வரும் கதை உறுப்பினர்களாகிய அஸ்ரப்கான், அல்கல்லா, ருஷ்யநாட்டு அழகி, முபாரக், ஜூபைதா, குலாபி, அலிகா, கோசலா ஆகிய அத்தனைபேரும் நம்மைப்போலவே இந்த உலகில் வாழ்ந்தவர்கள்! நம்மைப் போலவே நகமும் சதையும் உடையவர்களாய், உயிரும் உள்ளமும் படைத்தவர்களாய், இன்பமும் துன்பமும் நுகர்வர்களாய் இந்த மண்மீது நடந்தவர்கள்—சில பல நாள் சென்று மரணத்தைத் தழுவியவர்கள். அவர்களின் உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளே இங்கே இராதா மணாளனின் பேனா முனையில் பட்டுத் தெறித்துச் சுவை மிகு காதல் ஓவியங்களாக உருமாறி நம் உள்ளத்திற்கு உவகை தருகின்றன என்பதை உணர்ந்து படித்தால்தான், இந்தக் கதைகளின் முழுச் சிறப்பும் நன்கு புலனாகும்.

இதோ, 'ருஷ்யநாட்டு அழகி!' இதோ, நீங்கள்! 'அழகி', உங்களுக்கு ஆயிரம் கதைகளைக் கூறுவாள்! காது கொடுத்துக் கேளுங்கள்! இந்த உலகம் எவ்வளவு விசித்திரமானது என்பது உங்கட்கு நன்கு தெரியும். பிறகு, மனம் இருந்தால், இந்த உலகத்தின் கோணல்களை எப்படி நேர்படுத்துவது என்பதைப் பற்றியும் சிந்தியுங்கள். என்ன, சரிதானா?

ருஷ்ய நாட்டு அழகி

“கண்ணே இப்படிவா! ஏன் மிரளுகிறாய்! உன் மதுர மொழிகேட்டு மனமகிழ்ந்தேன்! மானே, மற்றுமொரு முத்தம் கொடு! இன்னு மொன்று கொடு! போதாது இன்னும்! பார்த் தாயா, உன் மதிமுகம் மலர்வதை! அணைப்பிலே உனக்கு அவ்வளவு ஆசை! இந்தா, ஒரு முத்தம். சரி நீ போ!”

வேறொரு பெண்ணைத் தன் அருகே இழுத் தான். “உன் நூடியிடை துவளத் துவள ஓடு கிறாயே, வா இப்படி! ஒய்யாரியே, ஓடினால் உன்னை விட்டு விடுவேனா? உன் இதழிலுள்ள தேனை உறுஞ்சாமலா விடுவேன்!” என்று கூறி அவளது இதழைச் சுவைத்து இன்புற்றான்.

தங்கப் பதுமை போன்று நின்றுகொண் டிருந்த ருஷ்யப் பெண்ணின் அருகில் சென்றான்! அவளும் ஆசை அனல் வீசும் கண்களோடு அவனை நோக்கினாள்! தளிர் போன்ற அவள் மேனியைத் தழுவினான். “அழகியே! உன்னை அணைக்கும் போது, என் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஒரே இன்பமாயிருக்கிறது! கண்ணே, உன்னிடத் தில் ஏதோ ஒரு அபூர்வமான சக்தி யிருக்கிறது. மங்கையர்க்கரசியே, உன்னிடத்தில் காணும் சுகம் மண் மீது வேறு எங்குத் தேடினும் கிடைக்காது! வா : இதோ கட்டிலறை! வா!! உள்ளம் கவர்ந்த சுந்தரியே, உள்ளே செல்லலாம் வா!”

இப்படி க்ரிமியா தேசத்து மன்னன், மூஸலேமல் அஸ்ரப்கானின் அரண்மனையிலே ஒரே கோலாகலக் காட்சியாயிருந்தது. கான் வம்சத்தில் உதித்த அஸ்ரப்கான், களம் பல கண்டவன். வெற்றி பல அடைந்தவன். எதிரிகள் கனவிலும் கானினது உருவைக் கண்டால், கலங்குவர். மன்னர் பலர் அவனுக்கு மண்டியிட்டனர். கப்பம் செலுத்தினர்கள், கானுக்குப் பல வேந்தர்கள். மன்னர் மன்னன், மாநிலம் போற்றும் மாவீரன், அஸ்ரப்கான்!

அஸ்ரப்கானின் அரண்மனை மிகப்பெரிது. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது. சிங்காரிகள் பலரைச் சிறைப் பிடித்துவந்து, தன் அந்தப்புரத்தில் வைத்துக்கொண்டிருந்தான் அவன். கோதையர்களோடு கொஞ்சுவான். புன்சிரிப்புக்காரிகளின் அணைப்பிலேபூரிப்பான். ஆடலழகிகளுடன் ஆடிப்பாடிக் கிடப்பான். மதுவருந்துவான் மங்கையரது இடை துவளும், அதைக்கண்டு மகிழ்வான்!

இப்படியாக ஒரே இன்பத்தில் மூழ்கிக்கிடந்தான் மன்னன். அவன் அரண்மனையிலே முந்நூறு அணங்குகளிருந்தார்கள்! அவர்கள் அனைவரும் பல தேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட கைதிகள்! முந்நூறு பெண்களும் முடிவேந்தனது ஆசை யறிந்து அதன்படி நடந்து கொண்டார்கள்.

ருஷ்ய நாட்டுப் பெண் எல்லோரையும் விட சிறிது எழில் மிக்கவள்! அவளிடத்தில் அரசனுக்கு

ஒரு அலாதியான ஆசை! அவளே அவனது உயிர்! அவளிஷ்டப்படி ஆடவும், பாடவும், களித்திருக்கவும் வேண்டி அவளுக்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தான்.

ருஷ்ய நாட்டு அழகியை அடிக்கடி தன் கோட்டைக்குத் தன்னுடனிருக்க அழைத்துச் செல்வான். அங்கும் அவர்கள் இன்புற்றிருக்க ஒரு தனி விடுதி உண்டு. மங்கை மகிழ்வதற்காக அதனுள்ளே, அழகிய ஆடையாபரணங்களும், பல தேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட அபூர்வமான பறவைகளும், இசைக்கருவிகளும் இருந்தன! மான் துள்ளுவதையும், மயில் ஆடுவதையும், கிளிகள் கொஞ்சுவதையும், கண்டும், கேட்டும் களிப்பார்கள்! இன்னிசையைக் கேட்பார்கள் இருவரும் இன்பத்தில் மூழ்குவார்கள்.

* * * *

அஸ்ரப்கானின் மகன் தோலயக் அல்கல்லா. அல்கல்லா ஒரு சிறந்த போர்வீரன்; திடசித்தம் உள்ளவன். தான் நினைத்ததை எவ்வளவு எதிர்ப்பு இருப்பினும் செய்தே முடிப்பான் அவன். தந்தைக்குமகனிடத்தில் அளவு கடந்த ஆசை. சிங்கத்தைப்போன்ற சித்தம் படைத்தவன் தனக்குப்புத்திரனய்ப் பிறந்ததை எண்ணி எண்ணி மனம் பூரிப்பான் அஸ்ரப்கான்!

மன்னன் மகன் பல நாடுகளின் மீது படை எடுத்தான். பராக்கிரமத்தோடு பல வேந்தர்களை

எதிர்த்தான்! சென்ற விடங்களிலெல்லாம், வெற்றியுடன்தான் திரும்பி வருவான்! அவன் அடியெடுத்து வைத்த நாடெல்லாம் இரத்தத்தடாகம்! நகரமெல்லாம் சுடுகாடுகள்! எப்பக்கம் திரும்பினும் பிணங்கள்! மாளிகைகளெல்லாம் தீயிற்கு இரையாயின!

இப்படி அவன் சென்ற நாடுகளை எல்லாம் நாசமாக்கிவிட்டு, அந்நாடுகளிலிருந்த பொன்னையும் பொருளையும், எழில்மிக்க இளம் பெண்களையும் தன்னாட்டிற்குக் கொண்டுவந்து விடுவான்.

இரண்டாம் தடவை, அல்கல்லா ருஷியாவின் மீது படை எடுத்தான். வெற்றியுடனும புகழுடனும், மிகுந்த செல்வத்துடனும், அழகிய பெண்களுடனும் தன்னாட்டிற்குத் திரும்பினான்.

நாடுமுழுவதும் வெற்றிவிழா கொண்டாட அரசன் ஏற்பாடு செய்தான். அல்கல்லாவின் தீரத்தையும், திறமையையும் நாட்டார் புகழ்ந்தார்கள். வீடுகளை எல்லாம் அலங்கரித்தார்கள். தெருக்களை எல்லாம் சுத்தம் செய்தார்கள். விருந்துகள் பல நடத்தினார்கள். மதுவருந்தி மகிழ்ந்தார்கள். அழகிய நடனங்களைக் கண்டு, ஆநந்தித்தார்கள்.

மன்னனது கொலு மண்டபத்திலே, போர் வீரர்களும அறிஞர்களும், செல்வர்களும் கூடினார்கள். குமாரிகள் பளபளப்பான கிண்ணங்களில் மதுவை ஊற்றித்தர, அதைப்பருகி இன்புற்றார்கள். கோமள வல்லிகள் விதவிதமான நடனங்களை

ஆடியும், பொருள் மிக்க கவிதைகளைப் பாடியும் வந்தவர்களை மகிழ்வித்தார்கள்! விருந்துண்டு முடியும் சமயத்தில், தன் மதுக் கலசத்தைக் கையிலேந்தி மன்னன் பேச எழுந்தான். "அறிஞர்களே! வீரர்களே! செல்வர்களே! நீங்களெல்லாம் வந்து இந்த வெற்றி விழாவினைச் சிறப்பித்ததற்காக என் நன்றியறிதலான வணக்கம்! அல்கல்லா! என் அருகில் வா! நீ தோன்றிய நான் வம்சத்திற்கு உன்னால் பெருமையும் புகழும் அதிகரிக்கின்றன. புத்திரனாய் நீ எனக்கு வாய்க்கும் பேறு கிடைத்ததே என்று பூரிக்கிறேன்! என் உடல் எப்பொழுது புழுக்களுக்கு இரையாகுமோ நான் அறியேன், வயதுமாய்விட்டது. இனி என் வாழ்வு நிலையற்றது. மகனே உனக்கு எதன் மேல் ஆசை? கேள் தருகிறேன்! மனதிலுள்ளதை உரைத்தாயானால், மனப்பூர்வமாய் அதனை உனக்கு அளிக்கிறேன்! கேள், அல்கல்லா!''

அல்கல்லா தன் தந்தையைப் பார்த்தபடியே மௌனமாக விருந்தான்.

"அல்கல்லா, ஏன் தயங்குகிறாய்? கேள்!"

"அப்பா?"

"சொல் அல்கல்லா!... இன்னுமா தயக்கம்?"

"என் மனதிலுள்ளதை........"

"ஆமாம்! அதனைத்தான் கேள்!"

"கேட்டால், வருத்தமோ கோபமோ கொள்ள மாட்டீர்களே?"

"புதுமையான கேள்வி!"

"அப்படியானல் கேட்கலாமா?"

"கேட்கும்படிதானே நான் சொல்கிறேன்"

"பிறகு மறுக்கமாட்டீர்களே?"

"அல்கல்லா, ஏன் என் உறுதியில் உனக்கு அவ்வளவு ஐயம்?......மாநிலத்தின் மன்னன் அஸ்ரப்கான் தன் மகன் கேட்கும் பரிசைத்தர ஒப்பாத அளவு ஈன உள்ளம் கொண்டவன் அல்லவே! மன்னாதி மன்னர்களின் மதடங்களைப் பறித்த கையிது! வீராதி வீரர்களின் மார்புகளில் வேல் பாய்ச்சிய வீரக்கையிது! இந்தக் கை, இன்று மகனின் விருப்ப மறிந்து அதன்படி பரிசு எடுத்துத் தர பூரித்துக் காத்திருக்கிறது. அல்கல்லா, உனக்குத் தேவையானதைக் கேள்."

"கேட்கட்டுமா?"

"கேள், கேள், தாமதிக்காது கேள்! மனதிலுள்ளதைத் தெரிவி! மறுக்காமல் தருகிறேன்.... கேள்!"

தந்தையின் சொற்கள் ஓய்ந்தனவோ இல்லையோ, அல்கல்லா வீரத்தோடு "மன்னர் மன்னவா! என் அருமைத் தந்தையே! அரண்மனையிலே உள்ள அந்த ருஷ்ய நாட்டுக் கைதியை எனக்கு அளியுங்கள், அதுவே போதும்!" என்றான்.

"உனக்குத் தூக்குத் தண்டனை" என்று நீதிபதி கூற, அதனைக் கேட்டுத் திடுக்கிடும் கைதியைப் போல், "எனக்கு அந்த ருஷிய நாட்டுக் கைதியை அளியுங்கள்" என்று அல்கல்லா கூறியதைக்

கேட்டதும், அஸ்ரப்கான் அலறினன். அவனது சித்தம் குழம்பியது. உலகமே தன் எதிரில் ஆடுவதைப்போல் தோன்றியது அவனுக்கு. மனதைத் திடப்படுத்திக் கொண்டான். "மகன் தானே, நாம் மறுத்தால் எதிர்த்துக்கூறவா போகிறன்!" என்று நினைத்தான். வேருெரு அழகியைக் கொடுத்தால் வேண்டாமென்று கூறிவிடப்போகிருன் என்று தீர்மானித்தான். ஆகவே விருந்து முடிந்ததும் தருவதாக ஒத்துக்கொண்டான்.

அல்கல்லாவின் உள்ளம் உவகையால் துள்ளியது. "நான் தங்களது புத்திரன், என் உதிரத்தை அப்படியே உறிஞ்சி எடுத்துக்கொள்ள வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்! என் உயிரை வேண்டினுலும இப்பொழுதே தருகிறேன்! தந்தையே, தங்களது உதாரகுணமே குணம்! தாங்கள் அளிக்கப்போகும் பொருளின அருமையை நானறிவேன். அவளது உள்ளம் கோணமல் நான் நடந்துகொள்வேன். அதைக்குறித்துத் தாங்கள் கவலைப்பட வேண்டாம்!' என்று மலர்ந்த முகத்தோடு மன்னனிடம் உரைத்தான்.

மணிமுடி தாங்கிய மன்னனின் தலைகவிழ்ந்து விட்டது! விருந்து முடிந்து எல்லோரும் வெளியே சென்று விட்டார்கள். ஒளி வீசிக்கொண்டிருந்த நிலவு மேகங்களிடையே சிக்கிக் கொண்டது

அரசனும் மகனும் அரண்மனையை நோக்கி நடந்தார்கள். இருவரும் மௌனமாகவே நடந்து கொண்டிருந்தார்கள். அஸ்ரப்கான் உள்ளத்திலே பற்பல எண்ணங்கள் வேகமாக எழுந்தன. விவ

ரிக்க முடியாத ஏதோ ஒருவிதமான திகில் அவன் உள்ளத்தில் தோன்றி அவனை வருத்தியது. மௌனமாக நடந்துகொண்டிருந்த மன்னன் தன் மகனிடம் பேசலானான்.

"அல்கல்லா! என் வாழ்நாள் முடிந்துகொண்டு வருகிறது. நான் இன்னும் நீண்ட நாட்களுக்கு வாழப்போவதில்லை. அந்த ருஷ்யப் பெண்ணின் ஆசையினால் தான் நான் வாழ்ந்து வருகிறேன். என் சக்தியும் அவளே, என் அரசும் அவளே, என் வாழ்வும் அவளே!..........

"மகனே, அவள் உனக்கு அவசியம் வேண்டுமா? சொல்லு! அரண்மனையிலே உள்ள அந்த முந்நூறு இளம் பெண்களிலே நீ விரும்பும் வேறொரு அழகியைக் கூறு, அவளை நான் உனக்களிக்கின்றேன். அல்லது அனைவரையுமே நீ அவளொருத்திக்குப் பதிலாக ஏற்றுக்கொள்வதானாலும். நான் தரச் சித்தமாயிருக்கிறேன்!" அல்கல்லா மௌனமாகவே நடந்துகொண்டிருந்தான்.

"வயதோ எனக்கு அதிகமாய்விட்டது. என் வாழ்வோ இனி நிலையற்றது. அவள் தான் என் வாழ்வின் கடைசி ஒளி, இன்பம், சகலமும்! உன் தந்தைநான் , நீ என்மகன், உன்னிடம் கெஞ்சுகிறேன், அவளை மறந்துவிடு, வேறெது வேண்டுமானாலும் தருகிறேன்." என்று கலங்கிய கண்களோடு கூறினான், அரசன். அல்கல்லா அதற்கும் வாய் திறக்கவே இல்லை!

"அவளை உனக்குக் கொடுத்துவிட்டு நான் எப்படி உயிர்வாழ்வேன். அவளை நீ அணைப்பதாயும், அவள் மனமகிழ்ந்து உனக்கு முத்தமிடுவதாயும், நீங்களிருவரும் ஆநந்தத்தில் ஆழ்ந்துகிடப்பதாயும், நான் கேள்விப்பட்டால் என் உள்ளம் என்ன பாடு படும் தெரியுமா? நான் இந்த இரவிற்குப் பின்னும் உயிர் வாழ வேண்டுமா? என் உடம்பிலுள்ள வடுக்களெல்லாம், திரும்பவும் இரணமாகமாறி, அவைகளிலிருந்து இரத்தம் முழுவதும் பீறிட்டு வேகமாய் வெளியே வந்து, இப்பொழுதே என்னைச் சாகடிக்கக் கூடாதா?" அழுகையும் ஆத்திரமும் கலந்த குரலில் கூறினன் இதை அரசன்!

அந்தப்புர வாயிலை வந்து அடைந்தபிறகும் கதவைத் திறக்காமல், தலைகவிழ்ந்தபடியே இருவரும் வெகுநேரம் நின்றுகொண்டிருந்தார்கள். ஆகாயம் முழுவதும் மேகம் நிரம்பி, இடியும் மினனலுமாயிருந்தது. காற்றும் பலமாய் வீசிக்கொண்டிருந்தது

அல்கல்லா தலைநிமிர்ந்து தன் தந்தையைப் பார்த்தான். "என் அருமைத்தந்தையே! கவலைப் படாதீர். மனைவிமையை இழந்தேன். அந்த மங்கையிடம் சொக்கினேன். தையலிடம்கொண்டமையலால் ஆகாததை எல்லாம் கூறிவிட்டேன்! மன்னவா, மன்னிக்கவும்! அவள் இனி எனக்கு வேண்டாம்." தந்தை படும் கஷ்டத்தைக் கண்டு தனயன் இப்படிக் கூறவேண்டியதுதானே முறை! அப்படிக் கூறினை அல்கல்லா? இல்லை! தந்தை தாக்கினும்,

தரணியே எதிர்ப்பினும் தாவி நினைத்ததை முடிக்கா மல் விடவே மாட்டான். இது அல்கல்லாவின் இயற்கையான குணம்.

"அப்பா! அவளை நான் ஆதிமுதற்கொண்டே நேசித்து வருகிறேன். மறுமுறையும் கூறுகி றேன், அந்த மங்கைதான் எனக்கு வேண்டும்" என்று அழுத்தமும் கண்டிப்பும் நிறைந்த குர லிலே கூறினன் அல்கல்லா.

"அவளை நீ மறக்க முடியாதா?" என்று கேட் டான் அரசன். அந்தக் கேள்வியில் உணர்ச்சியே இல்லை!

"ஒரு அழகிய பெண் பிறருக்கு எப்பொழுதும் வருத்தத்தையே உண்டாக்கிக்கொண்டிருப்பாள். அவளுக்கு மணமாகுமுன் தாய் தந்தையர்களுக்கு அவளால் கவலை. மணமான பின், அவள் அழகைக் கண்டு பிறர் யாராவது, அவளது உள்ளத்தைக் கவர்ந்து, அவளை அடைந்து, அனுபவித்து விடு வார்களோ என்று கவலையோடு அவள் நடத்தை யில் நாட்டத்தைச் செலுத்தியபடியே இருப்பான், அவள் கணவன். பிறர் உள்ளங்களை வாட்டவே பெண்கள் அழகிகளாய்ப் பிறக்கிறார்கள்!"

"அல்கல்லா, போதும் நிறுத்து உன்வேதாந் தத்தை! உடைந்த என் உள்ளத்திற்கு உன் உப தேசங்கள் பயனளிக்கமாட்டா. நொய் முற்றிவிட் டால் எந்த மருந்தினுலும் குணமாகாதது போல

இந்நீதிகள் எல்லாம் என் மனநோய் தீர்க்கும் மருந்தாகா!"

"தந்தையே, அவளால் நம் இருவருக்கும் தொல்லை. நான் அவளோடு இன்பமாய் இருந்தால் அதைக்கண்டு தாங்கள் சகிக்கமாட்டீர்கள். நான் அடையாமல் அவள் தங்களிடமேயிருந்தால், என் வாழ்வில் அமைதி இருக்காது!"

அஸ்ரப்கான் தலை நிமிர்ந்து, நீர் நிறைந்த கண்களுடனும், உருக்கத்துடனும் தன் மகனை நோக்கினன்.

"இதற்கொரு வழி இருக்கிறது, அப்பா"

"சொல்! விரைவாகச்சொல்!"

"அந்த அழகியினல்தானே அப்பா, இந்தத் தொல்லை?"

"அவளால் அல்ல, அல்கல்லா! அவளை நீ கேட்பதால்........."

"ஆமாம்! அதனைத்தான் சொல்கிறேன்...... ஒரேஒருவழி! நல்ல வழி! அப்படிச் செய்தால்தான் இருவருக்கும் மனச்சாந்தி ஏற்படும்"

மன்னன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வருத்தத்தோடு அல்கல்லாவைப் பார்த்தான்.

"தந்தையே! இருவருக்கும் மனவருத்தத்தை உண்டாக்கும் அவளை நாம் கொன்றுவிடலாம்!"

இதைக் கேட்டதும் அரசனின் இருதயம் வெடித்துவிடும்போல் ஆகிவிட்டது. வெகுநேரம்

யோசித்தான். அல்கல்லா கூறுவது சரியென்று அவனுக்குத் தோன்றிற்று!

"மலையுச்சியிலிருந்து கீழுள்ள சமுத்திரத்தில் நாம் அவளைத் தள்ளிவிடலாம்" என்றான் அல்கல்லா!

"அப்படியே செய்யலாம். என்னுடைய வாழ்க்கையின் ஒளியை இருளாக்கப்போகிறாய்!" என்று தழதழத்த குரலிலே கூறினான் அரசன். அவன் உதடுகள் அசைவற்று நின்றுவிட்டன. அவன் கண்களிலிருந்து முத்துமுத்தாகக் கண்ணீர் வழிந்தோடி அவனது தாடியை நனைத்தது.

அரண்மனையின் கதவைத் திறந்துகொண்டு இருவரும் உள்ளே சென்றார்கள்! வீரர் பலரை வெஞ்சமரில் முறியடித்த இருவருக்கும் அந்நேரத்தில் நடக்கவே உடலில் சக்தி இல்லாமல் போயிற்று. தளளாடித்தள்ளாடி நடந்தார்கள். கடைசியாக ருஷ்ய நாட்டு அழகியின் அறைக் கதவைத் திறந்தார்கள்.

தங்கத்தால் செய்த சிலையைப்போன்ற அந்த அழகி, தந்தத்தால் செய்த கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள்! அவளது இளமையின் கவர்ச்சி, அமைதி தவழும் முகப்பொலிவு.......... இவைகளைக்கண்டதும் அரசனது இருதயத்தின் அடித்தட்டிலே ஓர் ஆழ்ந்த கலக்கம் ஏற்பட்டது. அவன் கண்களில் மறுபடியும் நீர் நிறைந்துவிட்டது. துக்கத்தை அடக்க முடியாமல் விம்மினான். அழுகையின் சப்தத்தைக் கேட்டதும் அழகி

விழித்துக்கொண்டாள். அரசனைக் கண்டதும் அகமகிழ்ந்தாள். மன்னன் அருகே மகனிருக்கக் கண்டதும் திடுக்கிட்டாள்! அவள் உள்ளத்திலே பயம்! உடலிலே நடுக்கம்! "இந்த இரவில் இருவரும் ஏன் வந்தார்கள்? வேந்தன் விம்மி விம்மி அழுகிறாரே! ஒரு வேளை நமக்காக இருவருக்குள்ளும் போட்டியோ?......இருக்கும்!......?...... அப்படித்தான் இருக்கவேண்டும்......ஆம்! நமக்கு இனி ஆபத்துதான்" இப்படியாகச் சிந்தித்தாள். ஆழ்ந்து சிந்தித்தாள். ஊக்கமுள்ளவள், ஆகவே உணர்ந்தாள் நிலைமையை. அவள் மனதில் தோன்றிய பலவித உணர்ச்சிகளின் கிளர்ச்சியினால் அவள் தேகம் சிலிர்த்தது!

அஸ்ரப்கான் தன்னைச் சமாளித்துக்கொண்டு "எழுந்திரு! எங்களோடு வா!" என்று அதிகாரமும் துக்கமும் நிறைந்த குரலிலே கூறினான். இளநங்கை எழுந்தாள். இருவரையும் பின் தொடர்ந்தாள்.

ஊரைத்தாண்டினார்கள். நிலங்களைக் கடந்தார்கள். காட்டினிடையே நடந்தார்கள். வானிலே ஒளி வீசும் நிலவு!

ருஷ்யப் பெண் இருவருக்கும் பின்னால் தங்கித் தங்கிச் சென்றாள். அதனைக் கண்ட அல்கல்லா அவளைப் பார்த்து, "ஏன் பயமாயிருக்கிறதா, இப்படி நின்று நின்று வருகிறாயே!" என்றான். அவள் பதில் கூறாமல் கீழே உட்கார்ந்தாள். தன் பிரகாசமான கண்களால், இளவரசனின் கண்

களைத் தாக்கினுள். குனிந்து இரத்தம் பீறிடும் தன் மெல்லிய பாதங்களைக் காண்பித்தாள். "இரத்தமா? அழகியே, என் தோளின் மேல் உட்கார்ந்துகொள், நான் தூக்கிச் செல்கிறேன்!"

"அல்கல்லா, அவளை நீ தொடாதே! நானே அவளைத் தூக்கிக்கொள்கிறேன்!" என்று கூறி அவளைத் தன் தோள்களின் மீது தூக்கிக் கொண்டு நடந்தான், மன்னன். சிறிது நேரம் கழிந்தது.

"அப்பா, சற்று நில்லுங்கள்!"

"என்?"

"தாங்கள் அவளைத் தூக்கிச் செல்வதைக் காண என் உள்ளத்தில் ஏதோ ஓர் விதபொருமை உணர்ச்சி தோன்றுகிறது. நான் முன் செல்கிறேன். ஒரு வேளை என் மனது, தங்களை முதுகில் வாளினுல் குத்திக் கொல்வதற்கும் தூண்டக்கூடும்!" என்று கூறினுன் அல்கல்லா. மைந்தன் முன் செல்ல, தந்தை தையலைத் தோளில் சுமந்து கொண்டு, பின்னுல் சென்றுகொண்டிருந்தான். கடற்கரையை அடைந்தார்கள். சமுத்திரக்கரையிலுள்ள பாறையின்மேல் ஏறி, அதன் உச்சியை அடைந்தார்கள்.

கருங்கடலின் அலைகள் பாறையின் அடியில் வேகமாய் மோதும் ஓசை காதைத் துளைத்தது. "கண்ணே! உன்னைக் கொல்வதற்குத்தான் இங்கு அழைத்து வந்திருக்கிறோம்!" என்று நாத்

தழுதழுக்க உரைத்தான், மன்னன். ஆயாசத்தால் அதற்குமேல் கூறமுடியாமல் தத்தளித்தான். அவன் கண்களில் நீர் மல்கியது. அவளை அணைத்துக்கொண்டான், முத்தமிட்டான், பெருமூச்சு விட்டான்.

அவள் பாறையின் ஓரத்தில் நின்று அலைகள் நிறைந்த கருங்கடலைப்பார்த்தாள். அலைகளின் ஓசையைக்கேட்டு அலறி சற்று பின்புறம் நகர்ந்தாள். "நான் சாகச் சித்தமாயுள்ளேன். நீங்கள் என்னைத் தள்ளி விடுங்கள்!" என்று வீரத்தோடும் துக்கத்தோடும் கூறினாள்.

அவளை, அஸ்ரப்கான் தன் தலைக்குமேல் தூக்கி, மனதின் சோகத்தை அடக்கிக்கொண்டு, துணிந்து, விரைவாகப் பாறையின் உச்சியினின்றும் கடலில் எறிந்தான்! விழும்போது அவள் அலறிக் கதறிய சொற்களொன்றும் அவர்கள் காதில் விழாமல், அலைகளின் ஓசை தடுத்து விட்டது. கல்லில் செய்த சிலையைப்போல், அஸ்ரப்கான் நின்றுகொண்டிருந்தான். காற்றில் அவனது தலைமயிரும் தாடியும் பறந்தவண்ணமிருந்தன! அல்கல்லா தாரை தாரையாகக் கண்ணீர்விட்டான். அஸ்ரப்கானின் உதடுகள் படபடத்தன. அழகி பிணமானது கண்ட மன்னனது மனம் கொப்பளித்தது. சொர்ண பிம்பம் இறந்ததால் சொல்லொணு துக்கத்தில் துடிதுடித்தது அவன் உள்ளம். அவனது சிந்தனை குழம்பியது. குழந்தையைப்போலக் கோவெனக் கதறினுன்.

சிறிது நேரம் சென்றதும், அல்கல்லா, தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, "அப்பா, நாம் திரும்பிப்போகலாமா?" என்று தன் தந்தையிடம் துக்கம் நிறைந்த குரலிலே கூறினன். மன்னன் தன் தலை நிமிர்ந்து, மகனை உற்றுப்பார்த்து, "சற்றுப்பொறு!" என்ருன். சிறிது நேரம் கழிந்தது.

"அப்பா, நாம் திரும்பிப்போகலாமா?"

"சற்றுப் பொறு!"

சிறிதுநேரம் சென்றது.

"அப்பா, நாம் திரும்பலாமா?"

"சற்றுப் பொறு!"

இப்படியாக மகன் அழைக்க, தந்தை பொறு, பொறு என்று கூறிக்கொண்டிருந்தான். நீண்ட நேரத்திற்குப் பிறகு, அஸ்ரப்கான், அல்கல்லாவைப் பார்த்து, "மகனே! என்னை ஏன் அழைக்கிருய்? வீரமும் வல்லமையும் குறைந்தது, வாலிபம் மறைந்தது. இனி நான் வாழ்ந்து என்னபயன்? உயிர்போல் நேசித்த அவளது உயிரையும் குடித்துவிட்டேன். இனி நான் ஏன் வாழவேண்டும்? மகனே! இனி நீ தான் மன்னன்! மாநிலத்தாருக்கு நன்மையைச் செய்! வீரத்தோடு வாழ்! நான் வருகிறேன்" என்று கூறித் தன் மகனைச் சேர்த்து அணைத்துக்கொண்டு அழுதான். அவன் மார்பு விம்மி விம்மி அடங்கிற்று "இவ்வளவுக்கும் நான்தானே காரணம்!" என்று அல்கல்லாவும் புலம்பினன்.

அரசன் நீண்டதொரு பெருமூச்சுவிட்டான். நான்கு பக்கங்களையும் ஒருதரம் சுற்றிப்பார்த்தான்! உலகமே இருள் மயமாகத் தோன்றியது!

"தந்தையே, வேண்டாம்!"—இது கடல்நோக்கிச் செல்லும் அஸ்ரப்கானைப்பார்த்து, அல்கல்லா கதறிய குரல்!

"என்னைத் தடுக்காதே!" என்று கூறிக்கொண்டே விரைந்துசென்று, பாறையுச்சியினின்றும் கடலிலே விழுந்தான், அஸ்ரப்கான்.

"அப்பா! அப்பா!" என்று அலறினன் அல்கல்லா. செய்வதறியாமல் வெகுநேரம் நின்று கொண்டிருந்தான். பொலிவு இழந்த முகம்! துடி துடிக்கும் உள்ளம்! கண்ணீரால் மறைக்கப்பட்ட கண்கள்! அழுதுகொண்டே, தள்ளாடித் தள்ளாடித் தலை குனிந்தவாறே தன் அரண்மனைக்குத் திரும்பினன்!

கண்ணீர்த் துளி

மின்னி, மின்னி, வானில் ஒளிவீசும் நட்சத்திரங்கள்! அவைகளுக் கிடையே புகுந்து வேகமாகச் சென்று கொண்டிருந்த வெண்ணிலா! முழு நிலவைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தான் முபாரக். மதியைக்காணக்காண பற்பல எண்ணங்கள் அவன் மனதில் தோன்றின! முழு நிலவுதான் ஆனல் சிறிது சிறிதாகத் தேய் வதைப்போல் அவனுக்குத் தோன்றியது. ஓடிக் கொண்டே இருந்த நிலவில் இரண்டு கண்கள் தோன்றின! அழகிய தங்க மூக்குத் தெரிந்தது! சிவந்த இதழ்கள் விரிந்து, புன்னகை சிந்திற்று! வெண்மையாக முத்துப் பற்கள் ஒளி வீசின! பளிங்கு கன்னங்கள் 'பளிச் பளிச்'சென பிரகாசித்தன! ஆமாம், நிலவு மறைந்தது, ஆனல் ஜுபேதாவின் முகம் வானில் ஓடுவதைக் கண்டான்!

முபாரக்கின் உதடுகளில் மெல்லிய புன்னகையொன்று தோன்றி மறைந்தது உடனே முகம் வாடிவிட்டது.

"தோழி கூறியது உண்மையா? இன்றிரவாவது என் உயிரைக் காண்பேனு?" என்ற ஐய எண்ணங்கள் அவன் மனதில் தோன்றின. மெதுவாகத் தன் விரல்களால் நெற்றியைத் தடவினுன்.

அவன் நினைப்புக் குதிரை பின் நோக்கிப் பறக்க ஆரம்பித்தது.........

* * *

"நிலவைப் பார் ஜுபேதா! பாபம், துணைவனின்றித் தனியாகச் செல்கிருள்!"

"அதையெல்லாம் பார்க்க எனக்கு நேரமேது?"

"ஏன், கண்ணே?"

"தங்கள் முகத்தைப் பார்த்துக்கொண்டே தான் இருக்கவேண்டுமென்று என்மனம் கட்டளையிடுகிறது"

"சேசே! அப்படியா உன் மனம் கட்டளையிடுகிறது? என்மனம் என்ன கட்டளையிடுகிறது தெரியுமா!"

என்று கூறிக்கொண்டே, அவன் முகத்தை அவள் முகத்தோடு சேர்த்தான்! இரண்டு கன்னங்களும் உராய்ந்து இளம் உள்ளங்களில் களிப்புத் தேனைக் கசியச் செய்தன...........

"போதும், போதும்!".......

"முடியாது கண்ணே!..."

"ஹுஹு!......"

"ஜுபேதா?"

"முபாரக்?"

"ஒரு தடையுமிருக்காதே?"

"தாங்கள்தான் என் கணவர்! இதனை யாரால் தடுக்க முடியும்?"

"அப்படியானால் கையை இப்படி நீட்டு அன்பே!"

"ஏன்? கன்னங்கள் சிவந்தது போதாதா? கைகள் வேறு சிவக்கவேண்டுமா?"

"கன்னத்தையும் கையையும் கடித்தா தின்று விடுவேன்......இந்தா இந்த வைர மோதிரத்தை அணிந்துகொள்!"

அவள் பொன் விரலில் வைர மோதிரத்தைப் போட்டான்! "தென்றல் இடையே போகவிடா தீர்" என்று அவள் கூறவில்லை. ஆனால் நடந்தது அதுதான்!

* * *

......இந்தப் பழைய நிகழ்ச்சியை எண்ணி அவன் இன்ப மயக்கத்திலிருந்த பொழுது "முபா ரக்" என்ற குரலைக் கேட்டதும் திடுக்கிட்டுச் சுய நினைவுக்கு வந்தான். எதிரில் நிற்பது ஜுபேதா வின் தோழி ஸெலிமா என்பதை அறிந்ததும், மகிழ்ச்சியால் அவன் முகம் மலர்ந்தது.

"போகலாமா முபாரக்?" என்றாள் ஸெலிமா. அவள் கண்களில் கண்ணீர்த்துளிகள் தோன் றின. முபாரக் அதனைக் கவனிக்கவில்லை. "சரி" என்று கூறி, அவளைப் பின் தொடர்ந்தான்.

நடந்து சென்று ஒரு சிறிய சுரங்கத்தினுள் புகுந்தார்கள். இருண்ட அச் சுரங்கத்தில் செல் லும் பொழுது அவன் மனம் அச்சத்தால் சுருங்கி யது. ஆனால் அழகியைக் காணப்போகிறோம், அவள் அளிக்கும் இன்பத்தைச் சுவைக்கப்போகி

ரேம் என்றெண்ணியதும் களிப்பினால் அவன் இதயம் விரிந்தது.

கல்வியற்றவன் உள்ளத்தைப் போல், இருண்டிருந்த அச்சுரங்கத்தில், படிக்கட்டுகள் வளைந்து வளைந்து சென்றன. துர்நாற்றம் சில இடங்களில் மூக்கைத் துளைத்தது. பருக்கைக் கற்கள், கால்களிலிருக்கும் இரத்தத்தைக் குடிக்கத் துடிதுடித்தன. முற்கொடிகள் உடலின் இரத்தத்தைப் பரிசோதித்தன.

"முபாரக்! கோட்டையின் அருகில் நாம் வந்து விட்டோம்' என்றாள் ஸெலிமா. அவள் குரல் சுரங்கத்தில் பயங்கரமாக எதிரொலித்தது.

"கோட்டையின் அருகேதானே, வசந்த மண்டபமும் இருக்கிறது?"

"ஆமாம்"

"ஜுபேதா என்னைப் பற்றி........"

'பேசாமல் இருங்கள்!"

இருவரும் மௌனமாகவே நடந்தார்கள் கடைசியாகச் சுரங்கத்தை விட்டு வெளியே வந்து ஒரு நந்தவனத்தில் நுழைந்தார்கள்.

"அதோ தெரிகிறதே, விளக்கு வெளிச்சம் அதுதான் ஜுபேதா பேகம் இருக்கும் வசந்த மண்டபம்!"

"பேசாமல் இருங்கள்!...........வசந்த மண்டபத்தைச் சேர்ந்த இந்த மலர்த்தோட்டத்தில்

அடிமைப் பெண்கள் எந்நேரத்திலும் உலாவிக் கொண்டிருப்பார்கள்! சப்தம் செய்யாமல் வாருங்கள்!" என்று கூறி, மெதுவாக அடிமேல் அடி வைத்து நடந்தாள்! ஊமைபோல் அவள் பின் சென்றான் முபாரக்.

வசந்த மண்டபத்தின் பின் புறச் சுவரையடைந்தார்கள். ஸெலிமா தன்னிடமிருந்த சாவியால், ஒரு மரக் கதவைத் திறந்து, உள்ளே நுழைந்தாள். முபாரக்கும் தொடர்ந்தான்.

ஒரு பெரிய அறையினுள் சென்றார்கள். அவ்வறையில் பலகணிகளுக்கும், கதவுகளுக்கும் பட்டுத் திரைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அறை முழுவதும் புனுகு, ஜவ்வாது, அத்தர் ஆகிய மண மிகு பொருள்களின் வாசனை "கம கம" வென வீசிக்கொண்டிருந்தது. சந்தனக் கட்டையால் செய்து, யானைத் தந்தம் புதைத்த பல ஆசனங்களிருந்தன.

பாரசீக நாட்டு ஜமுக்காளங்கள் தரையில் போடப்பட்டிருந்தன. ஓவிய வல்லுநர்கள் தீட்டிய உயிரோவியங்கள், தம்மைக் காண்போரிடம் பேசின! கூரையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த வர்ணக் கண்ணாடிக் கிண்ணங்களில் விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

சாளரங்களின் வழியாக குளிர்ச்சியான வாசனைக் காற்று வீசிய வண்ணமிருந்தது. அறையின் அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்து, முபாரக் சிலைபோல் நின்றிருந்தான். அவனை உற்றுப்

பார்த்தாள் ஸெலிமா! அவள் முகத்தில் ஆத்திரத்தின் அறிகுறிகள் தென்பட்டன!

"முபாரக்" என்று மெதுவாக அழைத்தாள்.

"என்ன ஸெலிமா? ஜுபேதா......"

"பேசாமல் இருங்கள்!.........நான் சென்று தாங்கள் வந்திருப்பதாக ஜுபேதா பேகத்திடம் கூறி வருகிறேன். தாங்கள் உஷாராக இருக்கவேண்டும். பாதுஷாவின் வசந்த மண்டபத்திற்குள் நுழைந்த ஆணுக்கும் அவனுக்கு உதவியாயிருந்தவர்களுக்கும் மரண தண்டனை! நினைவிருக்கட்டும்!"

அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள் தோழி. வெளியில் வந்து சிறிது நேரம் நின்றாள். அவள் முகத்தில் குரூரமான ஒரு புன்னகை தோன்றியது! சந்தன மரத்தில் செய்த சாய்வு ஆசனத்தில் ஒரு கையை ஊன்றிக்கொண்டு உட்கார்ந்தாள். அவள் கண்கள் சிவந்தன. திடீரென்று அவள் முகம் வாடியது. கூர்விழிகளிலிருந்து இரண்டு கண்ணீர்த் துளிகள் கீழே உதிர்ந்தன! எழுந்தாள், தன் கடமையைச் செய்ய நடந்தாள்!

* * * *

பலகணியின் பட்டுத் திரைகளை விலக்கி வெளியே பார்த்தான் முபாரக். நிலவு இன்பமாக காய்ந்து கொண்டிருந்தது. மலர்ச் சோலையில் விரிந்த மலர்கள், மணத்தை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தன.

திரையை மூடிவிட்டு, ஒரு ஆசனத்தில் வந்தமர்ந்தான். ஸலிமா வெளியே சென்ற வழியில் தன் விழியை வைத்தான்! பலப் பல இன்ப உணர்ச்சிகள் அவன் உள்ளத்தில் பொங்கியெழுந்தன.

"ஜஹாங்கீர் பாதுஷாவின் வசந்த மண்டபத்தில், காற்றும் தொட அஞ்சும் அழகி, பேரழகி, இன்னும் சிறிது நேரத்தில் எனக்குச் சொந்தமாகப் போகிருள்," என்றெண்ணியதும் அவன் உடலின் ஒவ்வொரு அணுவிலும் இன்பம் கூத்தாடியது! நீள்விழி மங்கையின் நினைப்பு வெள்ளத்தில் முபாரக் மிதந்துகொண்டிருந்தான்.

மேகத்தைத் தள்ளிக்கொண்டு வெண்ணிலா வெளிவருவதுபோல், திரையை நீக்கிக்கொண்டு ஜுபேதா உள்ளே வந்தாள்!

முபாரக்கின் உள்ளத்திலும் உடலிலும் கட்டுக்கடங்கா உணர்ச்சி பீறிட்டது! அவள் இதழில் புன்னகை பூத்தது. அவன் உள்ளத்தில் தீயெரிந்தது!

ஜுபேதா நிகரற்ற அழகி! தங்கத்தால் செய்த சிலை! மையல் என்ற அம்புகள் நிறைந்த அம்புக்கூடுகள் அவள் கண்கள்! மலைத் தேனீக்கள் கட்டிய தேன் கூடுகள் அழகியின் இதழ்கள்!

விரிந்த கண்களோடும், துடி துடிக்கும் தோள்களோடும் நின்றிருந்தான் முபாரக். "பேசாம

விரு" என்று விரலால் சைகை செய்தாள் ஜுபேதா.

அழகி மெதுவாக நடந்து வந்து அவன் அருகில் நின்றாள்.

"என் கண்மணி ஜுபேதாவா நீ? நம்ப முடியவில்லையே?"

இடது கையை மேலெடுத்து அவன் முகத்திற் கெதிரில் நிறுத்தினாள். விரலொன்றில் வைர மோதிரம். அவள் கண்ணைப்போலவே ஒளி வீசியது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஜோஹன்பூரில் அஸ்ரப்கானின் அரண்மனைப் பூங்காவில், தான் வைரமோதிரத்தை அவள் கையில் போட்டது அவன் நினைவிற்கு வந்தது!

அணைக்க அருகில் சென்றான். திரை அசைந் தது! விலகி நின்றான்!

பட்டினால் மூடிய தட்டொன்றை ஏந்தி, ஸெலிமா உள்ளே வந்தாள். அறையின் இடையே இருந்த ஒரு பீடத்தில் தட்டை வைத்தாள்.

காதலர் இருவரும் சாளரத்தின் அருகே சென் றனர். வைரக் குழைகள் அவள் காதுகளில் ஊச லாடின!

"பேகம், திராக்ஷை ரசம்!"

"ஸெலிமா, கிண்ணங்களில் ஊற்றிக் கொண்டுவா!"

முபாரக்கும் ஜுபேதாவும் காதற் பேச்சில் மெய் மறந்திருந்தனர். பட்டுத் துணியை அகற்றி விட்டு, பெரிய கண்ணாடிப் பாத்திரத்திலிருந்த திராக்ஷை ரசத்தை இரண்டு சிறிய கிண்ணங்களில் ஸெலிமா ஊற்றினாள். காதலர்களை ஒரு முறை பார்த்தாள். அவள் உள்ளம் பதை பதைத்தது! அவள் தலை வெடித்துவிடும்போலாகிவிட்டது. அவர்களிருவரும் இவளைக் கவனிக்கவே யில்லை. ஸெலிமா தன் கண்களில் தோன்றிய நீர்த்துளிக ளைத் துடைத்துக் கொண்டாள்!

இடுப்பிலிருந்த சிறு டப்பியை மெதுவாக எடுத்து ஒரு கிண்ணத்தில் அதிலிருந்து வெள்ளைத் தூளை சிறிது கொட்டினாள்.

திராக்ஷை ரசக் கிண்ணங்களைக் காதலரிடம் கொடுத்தாள்! அவர்கள் குடித்தார்கள்!

"ஸெலிமா?"

"ஏன் பேகம்?"

"இன்று நீயே காவலிரு!"

"சரி பேகம்?"

"நீ போகலாம்"

உயிரற்ற உடலைப்போல, உணர்ச்சியற்று வெளியே வந்தாள் ஸெலிமா.

சாளரத்தை விட்டு, காதல் தீ மூண்ட உள்ளங் களில் சாந்தம் சேர்க்க, காதலர் தந்தக் கட்டிலை நாடி வந்தனர்!

*   *   *   *

இரவு நடு நிசி! முபாரக் விழித்தெழுந்தான். விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. ஜுபேதாவைப் பார்த்தான் அலங்கோலமாகப் படுத்துக் கொண்டிருந்தாள். மெதுவாக அவளைத் தட்டினன். எழவில்லை! அவள் தோள்களைப் பிடித்து ஆட்டினன். அசையவில்லை! கன்னத்தைத்தொட்டான். பனிக்கட்டியைப்போல் குளிர்ச்சியாக யிருந்தது! உடலைத் தொட்டான். மரம் போல் மரத்துப் போய் இருந்தது! அவன் உள்ளத்தில் பயம் தோன்றியது!

மூச்சு இருக்கிறதா என்று பார்த்தான். வரவில்லையென்பதை அறிந்ததும் அவன் இதயமே வெடித்து விடும் போலாகி விட்டது. உயிரோவியம் உயிரற்ற பிணமாகிக் கிடந்தாள்! செய்வது தெரியாமல் திகைத்தான். இந்த நிலையில் யாராவது பார்த்து விட்டால் என்ன நேருமென்று எண்ணியதும், அவன் உயிரை யாரோ பறிப்பது போன்ற உணர்ச்சி யுண்டாயிற்று.

சிறிது நேரத்திற்கு முன்பு, ஆசையோடு அள்ளியெடுத்த அவன், பிணமானதும் அருகிலிருக்கவும் பயந்தான்.

அறையின் கதவு மெதுவாகத் திறந்தது. உயிர் அவனிடமிருந்து பிரிவதைப்போல்தோன்றியது, முபாரக்கிற்கு.

ஸெலிமா உள்ளே வந்தாள்; முபாரக்கின் கை கால்கள் உதறின! அவன் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது.

"முபாரக்" அவள் குரல் ஆவேசத்தைக் காட்டியது. அவள் கண்கள் கோபத்தைக் கக்கின! அக் கண்களைக் காணவே அஞ்சினன். ஜுபேதாவின் பிணம், அவனுக்கு ஒருவித உணர்ச்சியையும் உண்டாக்கவில்லை!

"ஸெலிமா ஏன் இப்படிப் பார்க்கிருய்?" நடு நடுங்கும் குரலில் கேட்டான்.

"முபாரக்! நான் யார் தெரிகிறதா?" ஆத்திரத்தோடு கேட்டாள்.

"ஜுபேதாவின் தோழி ஸெலிமா, நீ எனக்குத் தெரியாதா?"

"உனக்குத் தெரியவில்லை!" ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தாள். அவன் உடல் பயத்தால் குலுங்கியது.

"துரோகி! உன் கண்களை நன்ருகத் திறந்து பார்த்துச் சொல்! நான் யார்?

"ஸெலிமா தானே!"

"ஸெலிமா அல்ல............அன்று ஆசை காட்டி உன்னல் கற்பழித்து அனதையாக்கப்பட்ட குலாபி நான்!" ஆவேசத்தோடு கூறினள்! அவள் கண்களில் கண்ணீர்த் துளிகள் தோன்றின.

"குலாபியா?"

'ஆமாம்! என்னைக் கற்பழித்துவிட்டு, ஓடி வந்துவிட்டாய்! உன்னைத் தேடி, கண்டு பிடித்துப்

பழிவாங்க வேண்டுமென்று சபதம் செய்தேன்...”
அவள் குரல் கம்மியது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

“ஜோஹன்பூரில் அஸ்ரப்கான் தங்கை ஜுபேதாவைக் காதலிப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு வந்தேன். ஜுபேதாவின் அழகைக் கேள்விப்பட்ட ஜஹாங்கீர் பாதுஷா, அவளைத் தன் வசந்த மண்டபத்தில் வைத்துக்கொள்ள அழைத்துச் சென்று விட்டதாகத் தெரிந்தது. மயக்கம் தெளிந்து மறுபடியும் நீ என்னிடம் வருவாய் என்று ஆசையோடு இருந்தேன்! ஆவல் நிறைந்த உள்ளத்தோடு காத்துக் கொண்டிருந்தேன்! துரோகி, நீயா திரும்புவாய்? வசந்த மண்டபத்திலிருந்த ஜுபேதாவை அடைய நீ ஆக்ரா வந்துவிட்டதாகச் சொல்லக் கேட்டேன். ஏழைதான் நான்! ஆனால் புத்திசாலி! ஜுபேதாவின் தோழியானேன்! உங்களிருவர்களுக்குமிடையே காதல் கடிதங்களை ஏந்திச் சென்றேன். அந்த நேரங்களில் என் உள்ளம்-பெண் உள்ளம்-எவ்வளவு வேதனைப் பட்டது தெரியுமா? எவ்வளவு கண்ணீர் சிந்தினேன் தெரியுமா?” அவள் உதடுகள் அசைய மறுத்தன! திரும்பவும் கண்ணீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டு வறண்ட குரலில் பேசத் தொடங்கினாள்!

“முபாரக்! நான் எதிர்பார்த்திருந்த நேரம் கிடைத்துவிட்டது. திராக்ஷை ரசத்தில் விஷம் கலந்து தந்தேன், தீர்ந்தாள் ஜுபேதா! நீயும்

இதோ......" என்று கூறிக் கொண்டே இடையி லிருந்த உடைவாளை வெளியில் இழுத்தாள். விளக்கின் மங்கிய ஒளியில் வாள் மின்னியது!

"குலாபி" கெஞ்சும் குரலில் கூறினன்!

"துரோகி பேசாதே!" என்று சீறினள்.

உடைவாளைப் பிடித்திருந்த கையை மேலே தூக்கி, ஓங்கினள்! அன்று கொஞ்சி, கெடுத்து கைவிட்ட அவன் இன்று கெஞ்சினன், பயனில்லை! ஓங்கினள்!

"ஐயோ!" என்று கதறினன்.

அவன் மார்பில் ஓங்கிக் குத்தினள்! ரத்தம் பீறிட்டுக்கொண்டு வெளியே வந்தது! அவன் உயி ரும் உடலைவிட்டு வெளியே சென்று விட்டது.

"ஐயோ" என்று அவன் கதறியதைக்கேட்டு வேலை ஆட்கள் ஓடிவந்தனர்.

* * * *

மறுநாள்! ஆக்ரா கோட்டையிலிருந்த ஒரு சிறையில் ஸெலிமா உட்கார்ந்து கொண்டிருந் தாள். அந்த இடம் மிகவும் அமைதியாக இருந் தது. ஒரு சிப்பாய் மட்டும் வாளோடு அங்குக் காவல் புரிந்து கொண்டிருந்தான். ஸெலிமாவின் மனம் கல்லாகி யிருந்தது; ஆனலும் அவள் கண் களில் நீர்த்துளிகள் அடிக்கடித் தோன்றிக் காய்ந் தன! அந்தக் கண்ணீர்த் துளி ஏன் தோன்றி

யது? முபாரக் இறந்ததற்காக வருத்தமா? அவன் தந்த சுகத்தை எண்ணி ஏக்கமா? அல்லது இளம் வயதில் தன் வாழ்வு இப்படிப் பாழாயிற்றே என்றதினுல் துக்கமா? அவள் மனம்—பெண் மனம்—யாருக்கும் புரியாது!

யாரோ வரும் காலடிச் சப்தத்தைக் கேட்டு, தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். கதவு திறக்கப்பட்டது. பாதுஷா உள்ளே வந்தார். எழுந்து மண்டியிட்டு வணக்கம் செய்தாள்.

"உன்னுடைய துரோகச் செயலுக்கு நீ கலங்கவில்லையா?"

"எது துரோகம்? முபாரக் என் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, என்னைக் கெடுத்து, கைவிட்டானே அது துரோகமா? அல்லது துரோகியைக் குத்திக் கொன்றேனே இது துரோகமா? என் காதலன் உள்ளத்தை என்னிடமிருந்து பிரித்து, தனக்குச் சொந்தமாக்கிக் கொண்ட ஜுபேதாவைக் கொல்வதா துரோகம்? யாருக்குத் துரோகம்?.........."

"யாரிடம் பேசுகிருய் என்பதை மறந்து ஏதேதோ அறிவுக்குப் பொருந்தாமல் பேசுகிருய்; உனக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?"

"தெரியும், அதற்காக நான் கவலைப்படவில்லை!"

இச் சொற்களைக் கேட்டு, பாதுஷா ஆச்சரியப்பட்டார்.

"விடுதலையடைய உனக்கு விருப்பமில்லையா?"

"இல்லை!"

பாதுஷாவின் கண்கள் வியப்பால் விரிந்தன. மௌனமாக வெளியே சென்றுவிட்டார்.

* * * *

மறுநாள் காலை சிப்பாய் ஒருவன் உணவு எடுத்துக்கொண்டு, ஸெலிமாவின் அறையினுள் சென்றான். சென்றவன் திகைப்பால் அசைவற்று அப்படியே நின்றுவிட்டான்! ஸெலிமா பிணமாகக் கிடந்தாள்! அவள் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீர்த்துளிகள் மட்டும் காயவில்லை! அவளருகே ஒரு டப்பி திறந்து கிடந்தது.

உறைந்த இரத்தம்

சிக்முகளூர் அன்று மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தது. தெருக்களில், தோரணங்கள் காற்ருேடு விளையாடிக்கொண்டிருந்தன. பெண்களின் முகங்களைக் காண நாணிய ரோஜா மலர்கள், அவர்கள் முகத்திற்குப் பின்புறமாகப்போய் கூந்தலில் ஒன்றிக்கொண்டன.

மாலை மறைந்தது. இரவும் தொடங்கலாயிற்று. அத்துடனே மணத்தம்பதிகளின் ஊர்வலமும் தொடங்கலாயிற்று.

வரிசை வரிசையாக தீப்பந்தங்கள்! மங்கல வாத்தியங்களின் இனிமையான கீதம்! விளக்கின் ஒளியினுல் மின்னிய பெண்களின் கன்னங்கள்! அழகாக அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு! அதில் வாழ்க்கை என்ற பூஞ்சோலையில் கைகோத்துக் கொண்டு புதிதாக நுழைந்த இளம் தம்பதிகள்!

தீப்பந்தங்களின் ஒளி மணமகளின் முகத்தில் பட்டுப் பிரதிபலித்தது. மணப்பெண்ணின் அழகைக் கண்டோர் புகழாமலிருக்க முடியாது அவள் அழகின் வடிவம்!

மெதுவாக ஊர்வலம் நகர்ந்தது. திரள்திரளாக மக்கள் ஊர்வலத்தோடு வந்துகொண்டிருந்தனர். ஊர்வலமும் அலிகாரின் அரண்மனையின்

அருகே வந்தது. அலிகார் சாதாரண உடை அணிந்து, மெதுவாகக் கூட்டத்திற்குள் புகுந்து விட்டான். அவன் கண்கள் மணப்பெண் கோச லாவைப் பார்த்தன! அவளைக் காணக்காண அவன் கண்கள் பரந்து விரிந்து ஒளிவிட்டன. மற்றவர்கள் கண்களுக்கும் அவனது கண்களுக் கும் தண்ணீருக்கும் நெருப்புக்கும் உள்ள மாறு பாட்டைவிட மிகுந்த மாறுபாடு காணப்பட்டது,

ஊர்வலத்துடனே அவனும் மெதுவாக நடந்து சென்றான். கோசலாவைப் பார்க்கப்பார்க்க அவ னது உள்ளம் தீக்காடு ஆயிற்று! கண்களை மூடிக் கொண்டு, கவலையோடு வேகமாக அரண்மனைக்குத் திரும்பினன்.

அன்றிரவு, இளங்கொடியாளின் இதழ்த் தேனைப் பருக உமிழ்நீர் கசிந்துகொண்டிருந்த அவன் வாய், சோற்றை விரும்பவேயில்லை! அவ னது அணைப்பால் குளிமைபெற எண்ணிய அவன் உடல் கட்டிலில் சாய்ந்ததும் சூடுகண்ட புழுப்போல் துடிதுடித்தது. அவன் உள்ளம் அழகு சிலை கோசலாவை வலம்வந்த வண்ணமிருந்தது!

* * *

அலிகார் திப்புசுல்தானின் தோழன். வாலி பப் பருவம், வசீகர முகம், திரண்ட தோள், அச் சத்தின் நிழலும் படாத உள்ளம், அரசியல் நுணுக் கங்களை ஆராய்ந்து கூறும் அளவு அறிவுத்திறம்— யாவும் அவனிடம் அமைந்திருந்தன. ஆனல் ஒரே ஒரு குறை! மன்னிக்கமுடியாத குறை! அழகிய

மங்கை மலர்களைக் கசக்கி நுகர்வதில் அடங்காத ஆவல் கொண்டவன் அவன்!

திப்புவிற்கு, அலிகார் கைகளென உதவி ஞன்! வில் வித்தையிலும் போர்முனையிலும் தேர்ந்த படையை நடத்திச்சென்று, எதிரிகளின் மேல் பாய்ந்து, அவர்கள் ஆணவத்தை அடக்கி, வெற்றிமாலையைத் திப்புவின் கழுத்தில் சூட்டி வந்தவன், அலிகார்! ஆகவே அவன் செய்த அட்டூழியங்களைக் கண்டு மனம் நோக முடிந்ததே அன்றி திப்புவினுல் அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவனுல் வாழ்விழந்த வனி தையர் ஏராளம்! பாழான குடும்பங்கள் பலப்பல! ஒரு சமயம், மக்களின் வாய்கள் அவன் வீரத்தை யும் பெற்ற வெற்றியையும் பேசி மகிழும்! மறுசமயம் அவர்களது கண்கள் அவனது இழி செயலைக் கண்டு நீரைச் சிந்தும்!

திப்பு சுல்தான் அரசாண்ட மைசூருக்கும், அதற்கு வடக்கேயிருந்த சாம்பூர் ராஜ்யத்திற்கும் போர் மூண்டது. வீரன் அலிகார், போர்க்களத் தில் எதிரிகளைத் தாக்கி, அவர்களின் உயிர்களைப் போக்கி, வெற்றிக் கொடியை நாட்டினுன். மன்னர். மனம் மகிழ்ந்தார். அலிகாரின் தோள் வலியைப் பாராட்டினுர்.

அலிகாரின் வீரத்திற்கு மதிப்பளிக்க அவ னைத் தன்னுட்டின் ஒரு பாகத்திற்குப் பிரதிநிதி யாக நியமித்தார். அலிகார் பிரதிநிதியான பிரதேசத்தின் தலைநகரமான சிக்முகளுருக்கு,

ஐந்தாறு குதிரைப் படையும், யானை வரிசையும், முன்னும் பின்னும் வர ஆடம்பரத்தோடும், ஆநந்தத்தோடும் வந்தடைந்தான். அவனைக் குறித்து சிக்முகளூர் வாசிகள் அறிந்திருந்ததனுல் அச்சமும் துக்கமுமடைந்தனர்.

அவ்வூருக்குவந்த சில மாதங்களுக்குப் பிறகு தான், மணமகள் கோசலா பல்லக்கில் செல்வதை அவன் கண்டான்.

அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை. அவளை அடையாவிட்டால், உயிர்வாழ்ந்து என்ன பயன் என்றெண்ணினுன்! அவன் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன! கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான்!

* * * *

மறுநாள் பொழுது புலர்ந்தது. மணமகன் சோமப்பாவின் வீட்டின் முன்பு ஒரு போர்வீரன் வந்து நின்ருன். சோமப்பா ஒரு பெரியவியாபாரி; பழைய புகழ்வாய்ந்த குடும்பமொன்றில் தோன்றியவன்.

போர்வீரன் தந்த அரச முத்திரையிட்ட கடிதத்தைப் படிக்கும்பொழுது, சோமப்பாவின் நெற்றியில் வியர்வை அரும்ப ஆரம்பித்தது. கவலையின் குறி அவன் முகத்தில் தோன்றியது.

வீட்டினுள் சென்று தன் இளம் மனைவி கோசலாவிடம் செய்தியைக் கூறினுன். அவள் கண்கள் கலங்கின. மனைவியிடம் விடைபெற்றுக்

கொண்டு, அலிகாரின் அரண்மனைக்குச் சென்றான் சோமப்பா.

அலிகாரைக் கண்டதும் பயத்தால் அவன் உள்ளம் சுருங்கியது! கைகால்கள் சிறிது நடுக்கமுற்றன!

'பாஜீ வம்சத்தில் பிறந்த சோமப்பா நீர் தானே?'

'ஆமாம்.'

'எமது திப்பு மன்னரின் ஆட்சியைக் கவிழ்க்க, ஆங்கிலேயரோடு கூடிச் சதி செய்யும் கூட்டத்தில் நீர் சேர்ந்திருக்கிறீரர்மே, உண்மையா?'

இதனைக் கேட்டதும் சோமப்பாவின் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. அவன் பயம் அதிகமாயிற்று. அலிகாரின் கண்கள் கோபத்தால் சிவந்தன!

'ஏன் தயங்குகிறீர்?...உண்மைதானே?'

'எனக்கொன்றும் தெரியாது! இதுவரைக்கும் நான் மைசூரில் இருந்தேன்!'

'அப்படியா? இந்தக் கடிதத்தைப் படித்துப் பாரும்! இதில் நீர் அந்த இரகசியக் கூட்டத்தில் சேர்ந்திருப்பதாக இருக்கிறதே, இதற்கென்ன சொல்கிறீர்?'

கடிதத்தை நடுங்கும் கைகளால் வாங்கி, கலங்கிய கண்களால் வாசித்தான்!

'இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிருந்தல்லவா எழுதப்பட்டிருக்கிறது! நான் அப்பொழுது மைசூரில் அல்லவா இருந்தேன்!'

'அதெல்லாம் எனக்குத் தெரியாது! சிக்முகளூரில் பாஜி வம்சத்தைச் சேர்ந்த சோமப்பா நீர் ஒருவர்தாம்! ஆகையினல் இதனை நீர்தாம் எழுதியிருக்கவேண்டும். நீர் நிரபராதி என்று நிரூபிக்கும் வரை சிறையில் உம்மை அடைத்துவைக்க உத்திரவிட்டிருக்கிறேன்! நிரபராதி என்று தெரிந்தால் விட்டுவிடுவேன்! குற்றம் செய்ததாக உறுதியாகிவிட்டால் உம்மைத் தூக்கிலிடுவேன்!' என்று ஆவேசத்தோடு கூறிவிட்டு, அலிகார் அறையினுள் சென்றுவிட்டான். சோமப்பா, கம்பிகளுக்குள்ளே கிடந்து தேம்பினன்!

இச்செய்தியைக் கேள்விப்பட்ட சோமப்பாவின் குடும்பத்தாரும், மனைவியும் கலங்கினர். நேற்று இரவு வரைக்கும் இன்பத்தென்றல் வீசிக்கொண்டிருந்த இடத்தில், திடீரென்று பயங்கரமான துன்பப் புயல் வீசத் தொடங்கியது!

கோசலா, போர் வீரர்கள் தோன்றிய வம்சத்தில் பிறந்தவள்! ஆகவே அவள் உள்ளத்தில் வீரமும், தீரமும் நிறைந்திருந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. கணவன் அக்கிரமமாகக் கைதியானன் என்ற செய்தியை எண்ண எண்ண அவள் மனதில் கவலையும் அதைவிட அதிகமாக ஆத்திரமும் பொங்கியது.

சிறிது நேரத்தில் துக்கத்தை மாற்றி தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, 'மூடு வண்டியைத் தயார் செய்க' என்று உத்திரவிட்டாள்.

அவள் சுற்றத்தார்கள் பயத்தால், கோசலா என்ன செய்யப்போகிறுள் என்பது புரியாமல் திகைத்தனர்.

'ராஜப் பிரதிநிதியைக் கண்டு, இது அடுக்குமா என்று நானே கேட்கப் போகிறேன்' என்று அவள் கூறியதும், உறவினர் திடுக்கிட்டு அவளைத் தடுத்தனர். பயனில்லை. ஆவேசத்தோடு புறப்பட்டுவிட்டாள்.

தன்னைக் காண வந்த அழகிக்குச் சுலபத்தில் பேட்டிதந்தான் அலிகார்.

ஒரு புறமாக ஒதுங்கி நின்று, கோசலா பேச ஆரம்பித்தாள்.

'என் கணவர் ஒரு தவறும் செய்தறியாதவர். விரோதத்தினுல் யாரோ அவர் மேல் வீண்பழி கூறியிருக்கிறுர்கள்!......'

'வீண்பழியை நம்புபவன் நானல்லன்! தக்க ஆதாரத்தோடுதான் அவரைக் கைது செய்திருக்கிறேன்...அவர் ராஜத்துரோகி...!'

'அவர் தந்தையும், என் தந்தையும் மன்னனிடம் அன்பு கொண்டவர்களாயிருந்த பொழுது இவர் மட்டும் எப்படி ராஜத்துரோகியாக இருக்க முடியும்?'

'ஆதாரங்களின் பேரில்தான் நான் கூறு கிறேன். அவர் ராஜத்துரோகிதான்.'

'ஒரு பாவமும் அறியாத அவரை விடுவிக்க வழியில்லையா?'

'ஏன் இல்லை? உண்டு!..............நாளை மாலை இங்கு வா! உனக்கு வேண்டிய உதவியை நான் செய்கிறேன்.'

பிறகு நேரே கோசலா சிறைச்சாலைக்குச் சென்று, தன் கணவனைக் கண்டாள். அந்த நிலை யில் அவனைக் கண்டதும் அவளுக்கு அழுகை பீறிட் டுக்கொண்டு வந்தது.

'தாங்கள் ராஜத்துரோகியா?'............

'இல்லை! இல்லை கோசலா!.........'

'ஆதாரம் எதாகிலும் இருக்கிறதா?.......'

'இருக்கிறது கண்ணே!'

'சொல்லுங்கள்........உடனே சொல்லுங்கள்! அவற்றைத் காட்டித் தங்களை உடனே விடுவிக் கிறேன்!'

'கோசலா, நான் மைசூரிலிருக்கும் பொழுது ஒருமுறை திப்பு மன்னருக்கு உதவி செய்திருக் கிறேன். அதற்கு அடையாளமாக எனக்கொரு பதக்கம் அரசர் தந்திருக்கிறார்; அதனைக் காட்டி ஞல் போதும். உடனே உனக்கு யாரும் உதவி யளிப்பார்கள்!'

'அப்படியானல் இப்பொழுதே அதனைச் செய்கிறேன்!'

'கோசலா! கண்ணே! நீ அந்தப் பொல்லாதவனின் எதிரில் செல்லாதே!......எனக்கும் பயமாக இருக்கிறது!.........'

'ஆபத்து நேரத்தில் வேறு வழியேது? வீரமரபில் பிறந்த எனக்கு, என்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியும்! கவலைப்படாதீர்கள்!........'

* * * *

கதிரவன் பொன்னொளி வீசும் மாலை நேரம்! அலிகார் நன்ருக, அழகாக உடையணிந்து அழுகிய உள்ளத்தின் துர்நாற்றத்தை மறைப்பதற்காக, உடலில் வாசனைத் தைலங்களைப் பூசிக்கொண்டிருந்தான்.

கோசலா அரண்மனையை வந்தடைந்தாள். ஆவலோடு வரவேற்ருன் அலிகார்!

'வா! கோசலா!' என்ருன் அவன். கண்களில் காமக் கனல் வீசியது. அவன் முகம் வெறி பிடித்தவனைப்போல் தோன்றியது. அவனது புது நிலையைக் காண கோசலா பயந்தாள்!

'உன் கணவனைக் காப்பாற்ற வேண்டும் அல்லவா?'

'ஆமாம்!

'நீ மனம் வைத்தால்தான் உன் கணவன் விடுதலையடைய முடியும்!'

'எனக்குப் புரியவில்லையே!'

'கண்ணே! என் மனம் போல் நடந்துகொள். உன் மணாளனை விடுவிக்கிறேன்!'

அவனது தீய எண்ணத்தை அறிந்து திடுக்கிட்டாள். அவள் உள்ளம் பதைபதைத்தது! உடல் வெடவெடத்தது. நடுநடுங்கும் நங்கையின் பொன்நிறக் கையைக் காமுகன் பற்றினான்! உதறிவிட்டு ஓட ஆரம்பித்தாள்! பசி கொண்ட புலிபோல் பாய்ந்தான்! மான் விழியாள் சிக்குண்டாள். அவன் பசிக்கு உணவானாள்! அன்றிரவே அவளது கணவன் தூக்கு மரத்தில் தொங்கினான்!

* * *

மறுநாள் கோசலா, மயக்கம் தெளிந்து எழுந்தாள். ஒருமுறை தன் உடலைப் பார்த்தாள். நாணிக் குனிந்து கொண்டாள்! மனதில் ஆத்திரம் பொங்கியெழுந்தது.

கணவன் தூக்கிலிடப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் சொல்லொணாத் துக்கத்தில் ஆழ்ந்தாள்.

இரண்டு நாட்கள் சென்றன! வஞ்சகனைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று தீர்மானித்தாள். பதக்கத்தை எடுத்துக்கொண்டு மூடுவண்டியில் நேரே திப்புவிடம் செல்லப் புறப்பட்டாள்.

திப்புவைக் கண்டதும் மூர்ச்சையடைந்து விழுந்தாள்! மூர்ச்சை தெளிந்தெழுந்ததும் மன்ன

னிடம் தன் சோக வரலாற்றைச் சொல்லி முடித்தாள்.

அதனைக் கேட்டதும் திப்பு சுல்தானுக்குக் கோபமும் சோகமும் மேலிட்டன!

தன் சேவகர்கள் மூலம் உடனே அலிகாரையும் அவன் நண்பன் உசேனையும் அழைத்து வரும்படிக் கட்டளை இட்டார்.

* * *

ஆசனத்தில் அமர்ந்திருந்த திப்புவின் கண்களில் தீப்பொறி பறந்தன! பயத்தோடு தலை குனிந்தபடி நின்றிருந்தான் அலிகார். அவன் அருகே உசேன் வியர்க்க வியர்க்க நின்றான். ஒரு பக்கமாக நீர் வழியும் கண்களோடு நின்றுகொண்டிருந்தாள் கோசலா.

'அலி! கோசலா சொல்வது உண்மையா?'

அலிகார் பதில் கூறவுமில்லை, குனிந்த தலையை நிமிர்த்தவுமில்லை.

'உசேன்! கோசலா சொல்வது உண்மைதானா?'

'மகராஜ்! எனக்கொன்றுமே தெரியாது!'

'துரோகி! யார் அங்கே......இவனைப் பிடித்துக் கம்பத்தில் கட்டுங்கள்!......ஒரு கொரடாவைக் கொண்டு வா!......'

ஆவேசம் வந்தவரைப்போல ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்தார் மன்னர்.

உசேனைக் கம்பத்தில் கட்டிவிட்டுப் பலமாக அடித்தார்கள்!

'உண்மை! கோசலா கூறுவது அவ்வளவும் உண்மை!' என்று கதறினன் உசேன். திப்புவின் கண்களில் நீர்த் துளிகள் தோன்றின. எங்கும் மௌனம் நிலைத்தது..........

'கோசலா! இந்த அலிகாருக்கு என்ன தண்டனை தரலாம்?'

'அது தங்களின் விருப்பம்...........எனக்கு உத்தரவளியுங்கள்!'

'எதற்கு?'

'உடன் கட்டை ஏற!'

'அது கூடாது!'

திப்பு மன்னர் யோசனையில் ஆழ்ந்தார்! பிறகு ஒரு முடிவுக்கு வந்தவரைப்போல திரும்பவும் கோசலாவிடம் பேச ஆரம்பித்தார்.

'கோசலா, என் சொல்லைத் தட்டாமல் நீ நடக்கவேண்டும்! நீ அலிகாரை மணந்துகொள்!'

'ஆ.........!'

'உன் மதிப்பைக்காப்பாற்ற அதுதான் வழி!'

'அநியாயம்! திப்புசுல்தான இப்படிப் பேசுகிறார்? என்னல் நம்ப முடியவில்லையே!'

'கோசலா! என் கருத்து இப்பொழுது உனக்குப் புரியாது!' என்றார் திப்பு. கோசலாவோ அப்பொழுது சம்மதிக்கத்தானில்லை.

* * *

அலங்கரிக்கப்பட்ட கட்டிலறை. மலர்கள் தூவப்பட்டிருந்த மஞ்சத்தின் மேல், கண்களில் ஒளிவீச, நரம்புகளில் துடிதுடிப்பு அதிகரிக்க, உள்ளம் உவகையில் மூழ்க, அலிகார் கோசலாவின் வருகையை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருந்தான்.

தலைகுனிந்த வண்ணம், அழகிய உடையணிந்து உள்ளே வந்தாள் கோசலா! கதவு தாளிடப்பட்டது! இன்னும் சிறிது நேரத்தில் அழகி அவளே இசைந்து தரும் இன்பத்தேனைப் பருகப்போகிறோம் என்பதை எண்ணியதும் அவன் மனம் ஆனந்தத்தால் கூத்தாடியது.

தயங்கி நின்ற கோசலாவின் அருகே சென்றான்.

'கண்ணே! இன்னுமா கவலை? இதோ......... இதோ.........இப்படிப்பார்.........' என்று கூறிக்கொண்டே அவளை அணைக்க முயன்றான்.

அவள் கண்களில் கனல் பறக்க நோக்கினாள்! அவள் உடலைத் தொட்டான்! உருவினாள் இடையிலிருந்த உடைவாளை! ஆவேசத்தோடு பாய்ச்சினாள் அவன் மார்பில்! அலி கீழே சாய்ந்தான். அந்தக் காமுகனின் உடலிலிருந்து குபீர் குபீரென்று இரத்தம் பீறிட்டுக்கொண்டு வெளிவந்தது.

'மாண்டான் மங்கையரின் வைரி! தூய முகமதிய மதத்தில் பிறந்த தூர்த்தன் தொலைந்தான்!' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள். தன் மார்புக்கு நேரே வாளைத் திருப்பிப் பிடித்தாள்! அவள் கண்களில் வீரத்தின் ஒளி கடைசி முறையாக வீசியது. ஐயோ! அவ்வளவுதான், சாய்ந்துவிட்டாள்! அவள் மார்பிலிருந்து குருதி கொப்பளித்துக் கொட்டியது. கட்டிலறை இரத்த மயமாயிற்று. அந்த உறைந்த இரத்தத்தில் இரு உடல்கள் உருண்டு கிடந்தன.

* * *

காலை வெகு நேரமாகியும், கதவு திறக்கப்படாததனால், திப்பும், அவர் மந்திரிகளும் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தனர்! அறையில் இரத்தம் ப்ரவியிருப்பதையும், உறைந்த இரத்தத்தில் இருவர் உடல்களும் உருண்டு கிடப்பதையும் கண்டதும், திப்புவுடன் வந்தவர்கள் திகைத்துத் திடுக்கிட்டு நின்றனர். திப்புவின் முகத்தில் மட்டும் புன்முறுவல் பூத்தது.

'இப்படி நடக்கும் என்று எனக்குத் தெரியும் முன்பே!' என்றார் மன்னர் மகிழ்ச்சி கலந்த பெருமிதமான குரலில்!

TMK.28

கருத்துக் கருவூலங்கள்

அஞ்சாநெஞ்சன் வால்டேர்	இளஞ்செழியன்	1	8	0
இந்திய அரசியல் திட்டம்	,,	2	0	0
அறிஞர் அண்ணாதுரை	,,	0	8	0
திராவிடஸ்தான் வேண்டாமா?	,,	0	8	0
சரிந்த சாம்ராஜ்யம்	,,	0	10	0
தேன்மொழி	இராதாமணாளன்	2	0	0
இளவரசி	,,	2	0	0
மனப்புயல்	,,	2	0	0
பொற்சிலை	,,	1	4	0
ருஷ்ய நாட்டழகி	,,	0	8	0
பேசும் பிணம்	,,	0	8	0
துளிதேன்	,,	0	8	0
புது வெள்ளம்	,,	0	8	0
மதம் அவசியமா?	,,	0	3	0
வகுப்புரிமைப் போராட்டம்	க. அன்பழகன்	1	12	0
சமுதாயப் புரட்சி	அறிஞர் அண்ணா	0	4	0
எமிலி ஜோலா		0	6	0
பெண்கள் புரட்சி		0	14	0
பெண்கள் போராட்டம்		0	6	0
ஆரியத்தால் விளைந்த கேடு		0	6	0
திராவிடம் என்றால் என்ன?		0	6	0
இராமாயணம் நடந்த கதையா?		0	3	0
புரோகிதராட்சி		0	8	0
ஆசிய ஜோதி அளித்திடும் நீதி		0	12	0

மற்றும் நெடுஞ்செழியன், அன்பழகன், கருணாநிதி, ஆசைத்தம்பி, வில்லாளன், அரங்கண்ணல் முதலிய இயக்கத் தோழர்கள் எழுதிய புத்தகங்கள் அனைத்தும் கிடைக்கும்

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு :: சென்னை-1.

Jacket Printed at Appar Achakam, Madras-1.